# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை

********************

**<u>கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வசுதைவ குடும்பகத்துக்கான யோகா</u>**

ஒன்பதாவது சர்வதேச யோகா தினத்தினை குறிக்கும் முகமாக பல்வேறு யோகா நிலையங்களுடன் ஒன்றிணைந்து இந்திய உயர் ஸ்தானிகராலயமும் உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையமும் இணைந்து கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் 2023 ஜூன் 17ஆம் திகதி காலை விசேட யோகா நிகழ்வொன்றினை ஒழுங்கமைத்திருந்தன.

2. இந்நிகழ்வில் விசேட விருந்தினர்களான கல்வி அமைச்சர் கௌரவ டாக்டர் சுசில் பிரேமஜெயந்த, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கௌரவ டாக்டர் பந்துல குணவர்தன, வெளி விவகார அமைச்சர் கௌரவ அலி சப்ரி, சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் கௌரவ சிசிர ஜெயக்கொடி, கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ அ. அரவிந்த குமார், உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ டாக்டர் சுரேன் ராகவன் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர். அத்துடன், இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே, உயர் ஸ்தானிகராலய உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள், மாணவர்கள், பொலிஸ் அதிகாரிகள், இந்திய சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் இலங்கையில் உள்ள யோகா ஆர்வலர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். இலங்கை சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன் நூற்றுக்கணக்கான சுதேச வைத்தியர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

3. இரத்மலானை பரம தம்ம சைத்திய பிரிவேனாவின் தலைமை குரு அதி வணக்கத்துக்குரிய கலாநிதி மைத்திபே விமலசேர தேரர் அவர்களின் பிரார்த்தனையுடன் சுதந்திர சதுக்க நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்ததுடன் இப்பிரார்த்தனையின்போது மனித குலத்தின் ஒட்டுமொத்த நலனுக்காக புத்த பெருமானின் ஆசிகளை அவர் வேண்டியிருந்தார். அஷ்டாங்க யோகா மந்திர், அஷ்டாங்க யோகா லங்கா, ஓம் கிரியா பாபாஜி, யோகா ஆரண்யம், பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையம், ஹதா யோகா நிலையம், மனித மகிமைக்கான நிலையம், ரித்மிக் யோகா அக்கடமி, வாழும் கலை, தெய்வீக வாழ்வுக்கான யோகா, இராமகிருஷ்ண மிஷன், செத்சத யோகா நிகேதனய, கொழும்பு பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் போன்ற இலங்கையில் உள்ள முன்னணி 25 யோகா நிலையங்களின் நிபுணர்களால் இங்கு 20 நிமிட யோகா மற்றும் தியான அமர்வுகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இந்நிகழ்வுகளை தொடர்ந்து மயூராபதி ஸ்ரீ

பத்ரகாளி அம்மன் ஆலய சிறுவர்களின் யோகா நிகழ்வொன்றும் இங்கு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

4. 2023 சர்வதேச யோகா தினத்துக்கான முன்னோட்ட நிகழ்வுகளாக கிட்டத்தட்ட 90க்கும் அதிகமான யோகா அமர்வுகள், பயிற்சி பட்டறைகள் விரிவுரைகள் மற்றும் ஆற்றுகைகள் போன்றவற்றை நாடளாவிய ரீதியில் பல்வேறு வயதினருக்காகவும் உத்தியோகத்தர்களுக்காகவும் பல்வேறு அரச நிறுவனங்கள், யோகா நிலையங்கள் மற்றும் உள்ளூர் பங்காளர்களுடன் ஒன்றிணைந்து சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஒழுங்கமை திருந்தது. இலங்கை மக்களின் ஒட்டுமொத்த நலனுக்காக யோகாவின் பொதுவான மரபின் முக்கியத்துவத்தை மீளுறுதிப்படுத்துவதை நோக்கிய ஒரு முயற்சியே இந்நிகழ்வுகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

5. யோகா பயிற்சிகள் ஊடாக ஆர்டிக் முதல் அந்தாடிக் வரையான நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சியாகவே 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டுவரும் நிலையில் அந்த விசேட அம்சத்தின் ஒரு பகுதியாகவே கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் 2023 சர்வதேச யோகா தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதேவேளை 2023 ஜூன் 21 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் விசேட யோகா நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2023 சர்வதேச யோகா தினத்தினை அனுஷ்டிக்கும் தனித்துவமிக்க முன்னெடுப்பான பூகோள சமுத்திர வளையத்தில் இணைந்துகொள்ளும் முயற்சியாக இந்நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அத்துடன். இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்தின் தொனிப் பொருளான வசுதைவகுடும்பகம் அல்லது ஒரே பூமி ஒரே குடும்பம் ஒரே எதிர்காலம் என்ற தொனிப்பொருளை எதிரொலிக்கும் வகையில் இவ்வருடம் சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

6. ஒவ்வொரு வருடமும் ஜூன் 21 ஆம் திகதியை சர்வதேச யோகா தினமாக பிரகடனம் செய்யும் தீர்மானம் 2014 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் இந்தியாவால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தமை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்பட வேண்டியதாகும். இந்த தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய இலங்கையுடன் 170 க்கும் அதிகமான நாடுகள் ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**************

கொழும்பு
17 ஜூன் 2023